குடிசை வாழ் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகை

*912—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடிசை மாற்று வாரியம் உலக வங்கித் திட்டம் என்று குடிசைவாழ் மக்களை வற்புறுத்தி ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தியாக வேண்டும் என்று கேட்பதை ரத்து செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவிற்கு இடமில்லை.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா சென்ற ஆண்டு தொடுக்கப்பட்ட வினா. இப்போது அந்த மக்கள் பணம் செலுத்தச் சென்றால், அரசு அதிகாரிகள் பெற மறுக்கின்றார்களே, அது இந்த அரசுக்குத் தெரியுமா அதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி உதவியோடு குடிசைப் பகுதியிலே குடியிருக்கின்ற அந்தக் குடிசைப் பகுதி மக்களுக்கு மேம்பாடு வசதிக்காக இப்படிப்பட்ட திட்டங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. இந்தத் திட்டம் தற்போது நடைமுறையிலே உள்ளது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இடத்தைச் சொல்வார்களேயானால், உரிய நடவடிக்கை விரைவிலே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி 148-வது வட்டத்தில் இந்தத் திட்டத்தில் பயன் அடையக்கூடிய அளவிற்கு மக்கள் பணம் செலுத்தச் சென்றபோது, அவர்கள் குடியிருக்கின்ற அரை மனையில் கால் மனையை விட்டுத்தந்தால் தான் தரமுடியும் என்று அரசு அதிகாரிகள் அறிவித்ததினுடைய விளைவாக, அந்தத் திட்டம் கடந்த 6 மாத காலமாக முடங்கியிருக்

1990 ஏப்ரல் 5]

கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை மீண்டும் துவங்குவதற்கு அவர்கள் குடியிருக்கிற இடத்திற்கு ஏற்றாற்போல பணம் பெற்றுக்கொள்ள உத்தரவிடுவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதியிலே குடியிருக்கிற அந்த மக்கள், அந்தக் குடிசைப் பகுதியிலே உள்ள அந்த வீட்டு மனையினுடைய மனை அளவு, குறிப்பிட்ட ஒரு சதவீதத் தொகை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும். மீதத் தொகை, மேம்பாட்டுத் தொகையில் தவணை முறையிலே செலுத்தப்பட வேண்டும். அந்தப் பகுதியினுடைய குறைபாடுகளை விரைவிலே அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் அலுவலகம்.

* 5408. திரு. இரெ. இராசமாணிக்கம் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களை எல்லையாகக் கொண்டு தற்பொழுது இயங்கிவரும் கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் சிதம்பரம் அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு மாவட்டத்திற்கு ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் துவக்க சாத்தியக்கூறு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

10.05 மணி

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்திலும் எத்தனை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன? அந்தச் சங்கங்களிலே அங்கம் வகிக்கக் கூடிய அங்கத்தினர்கள் எத்தனை பேர்? அதற்குத் தனியாக இயக்குநர் அலுவலகம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னார்களே அதற்கு என்ன காரணம் என்பதை தங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.